# இந்து வேதம்

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

## தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்
## அவர்கள் அருளியவை

**மார்கழி மாத வெளியீடு (Dec 2013)**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114

## இந்து வேத முன்னேற்றக் கழகம் தரும் இந்துவேத பாலபாடம், கொள்கை விளக்கம்

காணிக்கை ரூ.10/-

## முக்கிய அறிவிப்பு

இந்த ‘இந்து வேதம்’ எனும் மாத வெளியீடு, இந்த இதழ் முதல் இளமை மாறு இலக்கிய இயக்கத்தின் (இ.இ.இ.) கீழ் வெளியிடப் படுகின்றது. அடுத்த இதழ் முதல் இந்த வெளியீடு யாருக்கும் இலவசமாக வழங்கக் கூடாது என இ.இ.இயக்கத்தால் தீர்மானிக்கப் பட்டுள்ளது. எனவே, இந்த வெளியீட்டைத் தொடர்ந்து படிக்கும் குருதேவர் அவர்களின் தயாரிப்பான சித்தர்கள், சன்னிதானங்கள், சித்தர் நெறி ஆதரவாளர்கள், ஏந்தாளர்கள், பற்றுளர்கள், ... ஆகியோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுச் சந்தாத் தொகையான ரூபாய் 150/= (நூற்றைம்பது மட்டும்) அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். வங்கி மூலம் அனுப்ப விரும்புவோர் 09840730609 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**இளமை மாறு இலக்கிய இயக்கம்**
எண் 6, G.S.T.சாலை, A-413, வைகுண்டம் அபார்ட்மெண்ட்ஸ்,
நந்திவரம், கூடுவாஞ்சேரி - 603202
Phone: 94441 73940

# உள்ளுறை

1. இந்துவேத பாலபாடம் முதல் பாகம்.
“இந்து வேத விழியும், இந்து மத வழியும்”

2. இந்துவேத முன்னேற்றக் கழகத்தின் (இ.மு.க.) கொள்கை விளக்கச் சுருக்கம்.

— — — — — — — — — — — — — —

# இந்து வேத விழியும்

# இந்து மத வழியும்

அந்தணர் அண்ணல்
ஞானச்சாரியார்

## இ.மு.க.

## இந்துவேத முன்னேற்றக் கழகம்

## இந்து வேதாகம பாடசாலை

# பாலபாடம் முதல் பாகம்

வெளியீடு எண்: 456

# அருளாட்சி ஆயத்தப் பணிக்காக

எட்டு வயது முதல் பதினான்கு வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியருக்கு கற்றுத் தரும் பாலபாடம் (பாலுகர் பாடம்) குருபாரம்பரியத்திலிருந்து எடுக்கப் பட்டது.

# இந்து வேதத்தை தெரிந்து கொள்ளுங்கள்!
# இந்து மதத்தை புரிந்து கொள்ளுங்கள்!

இவற்றால் வாழ்க்கையில் உள்ள அனைத்து வகையான சிக்கல்கள், தொல்லைகள், துன்பங்கள், கவலைகள், தேக்கங்கள், வீக்கங்கள், அடக்கங்கள், ஒழுக்கங்கள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள், நோய்நிலைகள், பற்றாக்குறைகள், நிம்மதியின்மை, பகை, இழப்பு, ... முதலிய அனைத்தையும் கூடுமானவரை தடுத்துக் கொள்ள; தடுத்து அகற்றிக் கொள்ள; அடுத்து எப்பொழுதும் பாதிப்பு வராமல் தப்பித்துக் கொள்ள, பரிகாரங்களைத் தேடிக் கொள்ள முடியும்.

இப்படி இந்த உலகிலேயே மனித வாழ்வில் வரக்கூடிய அனைத்து வகையான பாதிப்புக்களுக்கும் பரிகாரம் கூறக்கூடிய வேதம் இந்துவேதம்தான், மதம் இந்து மதம்தான்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் காரண காரியமின்றியும், மனித முயற்சிகளுக்கும் அறிவிற்கும் அப்பாற்பட்டும் பல்வேறு வகையான பாதிப்புகள், இழப்புகள், ஆபத்துகள், தோல்விகள், கவலைகள் ஏற்படுவதற்குரிய காரணத்தை ஒவ்வொரு மனிதரும் 1) பிறப்பியல் (சாதகம்), 2) பெயரியல் (பேர் ராசி), 3) வரியியல் (கைரேகை), 4) அங்கவியல் (உறுப்பிலக்கணம்), 5. மனையியல் (மனையடி சாத்தர, சாத்திர, சாத்திறங்கள்) என்பனவற்றால் தெரிந்து புரிந்து உரிய பரிகாரங்கள் செய்து தடுத்துக் கொள்ளவும் தவிர்த்துக் கொள்ளவும் தப்பித்துக் கொள்ளவும் உரிய வழிவகைகள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன.

இந்துவேதமும், இந்துமதமும்தான் மனிதனுடைய சீவன்; ஆவி, ஆருயிர், ஆன்மா என்ற மூன்றின் கூட்டிணைப்பால் உருவாகின்றது என்பதையும்; இச்சீவன், முற்பிறப்பு, மறுபிறப்பு எனும் இரண்டின் அடிப்படையில்தான் இப்பிறப்புக்குரிய வாழ்க்கை வாழுகின்றது என்பதையும் விளக்குகின்றன.

உலக வாழ்க்கை பிண்டத்தவர், அண்டத்தவர், பேரண்டத்தவர், அண்ட பேரண்டத்தவர் எனும் விண்ணுலக நால்வரையும்; குடும்ப ஆண்டவர், குலதெய்வம், கிராமத்து தேவர் தேவதை, நாட்டுக் கடவுளர் எனும் மண்ணுலக நால்வரையும் போற்றிப் பேணிப் பணிந்து பத்தியுடன் வழிபடுவதன் மூலம் எளிதாக செப்பனிடப்பட முடியும் என்ற பேருண்மையை விளக்கிக் கூறுகிறது.

## எண்வகைச் செய்முறை விதிகள்

இப்படி உலக வாழ்க்கையை செம்மைப் படுத்திக் கொள்வதற்காக விண்ணுலக நால்வரோடும் மண்ணுலக நால்வரோடும் தொடர்பு கொள்ளுவதற்குரிய செய்முறை விதிகளாக, செயல்பாட்டு வழிவகைகளாகக் கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்களாக

**நான்கு வகைப்பட்ட முறைகள்**

அழுகை முறை
தொழுகை முறை
எள்ளல் முறை
ஏசல் முறை

**நான்கு வகைப்பட்ட நெறிகள்**

வணங்கு நெறி
வழிபடு நெறி
கும்பிடு நெறி
பூசை நெறி

என்ற **எட்டு வகை செய்முறை விதிகள் இந்துவேதத்திலும் இந்து மதத்திலும்தான் இருக்கின்றன.**

உலக வாழ்க்கையைச் செம்மைப் படுத்தக் கூடிய எண்வகைச் செய்முறை விதிகள் வழங்கப் பட்டுள்ளது போல் உலக வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதற்காக இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவராகவும், இந்துவேத நாயகமாகவும், இந்துமதத் தந்தையாகவும் உள்ள அந்தணர் அண்ணல்,

ஞானுச்சாரியாரின் தலைமையின் கீழ் எண்வகைச் செயலாளர்களாக எண் வகை ஆச்சாரியார்கள்,

சிவாச்சாரியார்
ஆதி சிவாச்சாரியார்
ஈசுவராச்சாரியார்
ஆதி ஈசுவராச்சாரியார்
பரமாச்சாரியார்
ஆதி பரமாச்சாரியார்
சங்கராச்சாரியார்
ஆதி சங்கராச்சாரியார்

தோற்றுவிக்கப் பட்டிருக்கிருர்கள்.

## அருளுலகின் பண்படாத நால்வர்:

இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் அருளுலகில் எந்தவிதமான கட்டுப்பாடுகளுக்கும், நடைமுறைகளுக்கும் கட்டுப்படாத பண்பாடற்ற நால்வர் என்று 1) காற்று, 2) கருப்பு, 3) பேய், 4) பிசாசு என்ற நான்கு வகையினர் குறிக்கப் படுகின்ருர்கள்.

## அருளுலகின் பண்பட்ட நால்வர்:

இந்துவேதத்திலும், இந்து மதத்திலும் எல்லா வகையான சட்டதிட்டக் கட்டுப்பாட்டு நெறிகளேயும், அணுகு முறைகளேயும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அருளுலகின் பண்பட்ட நால்வர் என்று 1) குடும்ப ஆண்டவர், 2) குலதெய்வம், 3) கிராமத்து தேவர் தேவதை, 4) நாட்டுக் கடவுளர் என்று நான்கு வகையினர் குறிக்கப் படுகின்ருர்கள்.

இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் உலகியலில் நான்கு வகைப்பட்ட வாழ்க்கை வகைகளும், அவற்றிற்குரிய நெறிமுறை விதிகளும், நீதிகளும், உரிமைகளும், பெருமைகளும் தெள்ளத் தெளிவாக வரையறை செய்யப் பட்டிருக்கின்றன. அவை, 1) தனிமனித வாழ்க்கை, 2) குடும்ப வாழ்க்கை, 3) சமுதாய வாழ்க்கை, 4) அரசியல் வாழ்க்கை என்ற நான்கு வகைப்பட்ட

வாழ்க்கை; இந்த நான்கு வகைப்பட்ட வாழ்க்கைக்குரிய மக்கள், தங்கள் தங்கள் விருப்பத்திற்கும் சுவையுணர்வுக்கும் அக்கறைக்கும் ஆர்வத்திற்கும் ஏற்ப **'அருளுலக வாழ்க்கை நான்கு'** எனப்படும் 1. அறவி வாழ்க்கை, 2. உறவி வாழ்க்கை, 3. துறவி வாழ்க்கை, 4. மறவி வாழ்க்கை எனும் நான்கு வகை வாழ்க்கையில் எந்த வாழ்க்கையை வேண்டுமானாலும் ஏற்று வாழலாம். அதாவது இந்த நான்கும் சமமானவையேயாகும்; எதுவும் எதையும் விட உயர்ந்தது என்றோ, தாழ்ந்தது என்றோ, பயனுடையது என்றோ, பயனற்றது என்றோ கூறிட முடியாது என்ற புரட்சி மிகு சமத்துவக் கொள்கையை இந்து வேதமும் இந்துமதமும்தான் வழங்குகின்றன.

இந்து வேதமும் இந்துமதமும்தான் அருளுலகத்தவர்களிடம் அதாவது பொதுவான சொல்லில் கடவுளர், தேவர், தேவதை, தெய்வம், ஆண்டவர் எனப்படும் மானுடர் உலகியலாகத் தங்களுக்கு உணவு, உடை, உறையுள், செல்வம், நல்வாழ்வு, பாதுகாப்பு முதலியவைகளை மட்டும் வேண்டிப் பூசை செய்து வாழும் வாழ்க்கை முழுமையான அருளுலக வாழ்க்கையல்ல. அதாவது, அருளுலகத்தவரிடம் முழுமையாகப் பத்தி செலுத்தி பத்தியாளராக, அருளுலகத்தவரிடம் சத்திகளைப் பெற்று சத்தியாளராக, அருளுலகத்தவரிடம் சித்திகளைப் பெற்று சித்தியாளராக, அருளுலகத்தவரிடம் முத்திகளைப் பெற்று முத்தியாளராக வாழும் நான்கு வகைப்பட்ட வாழ்க்கையே அருளுலக வாழ்க்கை என்று கூறுகிறது இந்துவேதமும், இந்துமதமும்.

இந்து வேதத்திலும், இந்துமதத்திலும்தான் அருளுலகத்தவர்களில் ஆண் நிலையினர், பெண் நிலையினர், ஆண் பெண் கலந்த அலி நிலையினர் என்று மூன்று வகைப்பட்ட நிலையினர் இருக்கின்றார்கள் என்றும், இந்த மூன்று வகைப்பட்டவர்களிலும் 1. பிறப்பவர்கள் 2. இறப்பவர்கள், 3. பிறப்பு இறப்பு அற்ற பெருநிலையினர் என்ற மூன்று வகையினர் இருக்கின்றார்கள் என்றும் மிக மிகத் தெளிவாக அருளுலகத் தலைவர்கள் பற்றிய பேருண்மைகள் விளக்கப் படுகின்றன.

இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் அருளுலகைத் தெரிந்து அறிந்து புரிந்து பயன்படுத்திக் கொள்ள மானுடர்க்கு உதவுவதற்காக

**விண்ணுலக ஐவர் குழு என்று:-**

பதினெண் சித்தர்கள் குழு
பதினெட்டாம்படிக் கருப்பர்கள் குழு
48 வகைக் கடவுளர்கள் குழு
48 வகை வழிபடுநிலையினர் குழு
48 வகைச் சித்தர்கள் குழு, எனும் ஐந்து வகைக் குழுக்களும்,

**மண்ணுலக ஐவர் குழு என்று:-**

33 ஆயிரம் கோடி தேவர்கள் குழு
48 ஆயிரம் கோடி இருடிகள் குழு
ஆயிரங் கோடி தேவதைகள் குழு
96 ஆயிரம் கோடி கணங்கள் குழு
108 ஆயிரம் கோடி முனிவர்கள் குழு

எனும் ஐந்து வகைக் குழுக்களும் திட்டவட்டமாக வரையறைப் படுத்தி வேறுபடுத்திப் பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப்படுகின்றன. இதனால், மக்கள், தங்கள் தங்களின் தேவைக்கேற்ப தங்களுக்குத் தேவையானவர்களைத் தேர்ந்தெடுத்துத் தொடர்பு கொண்டு பயனடைய முடிகின்றது, பயனடைகின்றார்கள்.

இந்துவேதத்திலும், இந்துமதத்திலும்தான், கடவுளர்கள்

1. விண்வெளியிலிருந்து வரக்கூடிய கடவுள்களும், மண்ணுலகிலிருந்து தோன்றக் கூடிய கடவுள்களும் **திருக்கல்கள்** என்று குறிக்கப் படுகின்றனர்.

2. இந்து வேதத்திலும் இந்துமதத்திலும்தான் பயிரினங்களிலிருந்து தோன்றக் கூடிய கடவுள்கள் **தருக்கல்கள்** என்று குறிக்கப் படுகின்றனர்.

3. இந்துவேதத்திலும், இந்துமதத்திலும்தான் உயிரினங்களிலிருந்து தோன்றக் கூடிய கடவுளர்கள் **கருக்கல்கள்** என்று குறிக்கப் படுகின்றனர்.

4. இந்துவேதத்திலும், இந்துமதத்திலும்தான் அருளாளர்களால் உண்டாகக் கூடிய கடவுளர்கள் **குருக்கல்கள்** என்று குறிக்கப் படுகின்றனர் என்று கடவுளர்களில் பிறப்புக்களின் அடிப்படையில் நான்கு வகைப்பட்ட கடவுளர்கள் திட்டவட்டமாக மிகத் தெளிவாக வேறுபடுத்தி இனம் பிரித்து வகைப்படுத்திப் பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப்படுகிறார்கள்.

இந்துவேதத்திலும் இந்துமதத்திலும்தான் கடவுளர்களில் 1. அருவநிலைக் கடவுளர்கள், 2. அருவுருவ நிலைக் கடவுளர்கள், 3. உருவ அருவ நிலைக் கடவுளர்கள், 4. உருவ நிலைக் கடவுளர்கள் என்று நான்கு வகைப்பட்ட கடவுளர்கள் அவர்களின் வடிவமைப்பின் தோற்றப் பொலிவுகளுக்கேற்பத் திட்டவட்டமாக வரையறைப்படுத்தி மிகமிகத் தெளிவாக துல்லியமாக எளிமையாகப் பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப் படுகிறார்கள்.

இந்துவேதத்திலும், இந்துமதத்திலும்தான் 1. நான்கு திசைகள், 2. எட்டுத் திசைகள், 3. பதினாறு திசைகள், 4. முப்பத்திரண்டு திசைகள், 5. அறுபத்து நான்கு திசைகள் என்று திசைகளை நோக்கி வழிபடக் கூடிய திசை வழிபாட்டுப் பூசை அல்லது வெட்டவெளிப் பூசை என்ற **பூசை நெறிமுறை விதிவகைகள்** இருக்கின்றன.

இந்துவேதத்திலும், இந்துமதத்திலும்தான் வானத்தை, வளியை (காற்றை), நெருப்பை (தீயை), நீரை, நிலத்தை (மண்ணை) வழிபடும் ஐந்து வகைப் **பூசை நெறிமுறை விதி வகைகள்** இருக்கின்றன.

இந்துவேதத்திலும் இந்து மதத்திலும்தான் 1. [இலை] ... 2. [காய்] ... 3. [கனி] ... *(இவை மூன்றும் நகலில் தெளிவாகத் தெரியவில்லை)* 4. செடி 5. கொடி 6. மரம் 7. விலங்குகள், 8. பறப்பன, 9. நீர் வாழ்வன என்று வழிபாட்டுக்குரிய கடவுளர்

தகுதியைப் பெற்ற பயிரினங்களும், உயிரினங்களும் மிகத் தெளிவாகத் திட்டவட்டமாகப் பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

இந்து வேதத்திலும் இந்து மதத்திலும்தான் விண்ணுலக மண்ணுலக அருளுலகத்தவர்களான 1. கடவுளர்கள், 2. தேவர் தேவதைகள், 3. தெய்வங்கள், 4. ஆண்டவர்கள், 5. பிண்டத்தவர்கள், 6. அண்டத்தவர்கள், 7. பேரண்டத்தவர்கள், 8. அண்ட பேரண்டத்தவர்கள், 9. காற்றுகள், 10. கருப்புகள், 11. பேய்கள், 12. பிசாசுகள் எனும் பன்னிரண்டு வகைப்பட்டவர்களுக்காக:-

48 வகைப்பட்ட கருவறைகள்,
48 வகைப்பட்ட வெட்டவெளிக் கருவறைகள்
48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகள்
48 வகைப்பட்ட கோயில் மூலக் கருவறைகள்

... என்று **'நான்கு வகை அருளுலகத்தவர் வாழிடங்கள்'** திட்டவட்டமாக, தெளிவாக, எளிமையாக, விளக்கமாக வரையறைப்படுத்தி பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப் படுகின்றன.

இந்து வேதத்திலும் இந்து மதத்திலும்தான் மனித வாழ்க்கை 1. விண்மீன்கள், 2. கோள்கள், 3. இராசிகள், 4. நாள்கள், 5. பில்லி, 6. சூன்யம், 7. ஏவல், 8. செய்வினை, 9. வைப்பு, 10. கழிப்பு, 11. மருந்து, 12. கண்ணேறு என்று **'மனித வாழ்வைப் பாதிக்கும் பாதிப்புச் சத்திகள் பன்னிரண்டு'** திட்டவட்டமாக, தெளிவாக, எளிமையாக, விளக்கமாக வரையறைப் படுத்திப் பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

இந்து வேதத்திலும் இந்து மதத்திலும்தான் **'மனித வாழ்க்கையைப் பாதுகாக்கக் கூடிய பாதுகாப்புச் சத்திகள் பதினெட்டு'** என்று:- 1. திருநீறு, 2. மஞ்சள், 3. குங்குமம், 4. சாந்து, 5. சந்தனம், 6. மை, 7. திருமண், 8. பூ (மலர்), 9. இலை, 10. பட்டை, 11. தண்டு, 12. வேர், 13. விதை, 14. எண்ணெய், 15. முடிகயிறு, 16. தாயத்து, 17. சக்கரம், 18. உருத்திராக்கம் (காய், கனி) எனும் பதினெட்டு வகைப் பொருள்களும் மிகமிகத் தெளிவாகத்

திட்டவட்டமாக எளிமையாக, விளக்கமாக வரையறைப் படுத்திப் பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப் படுகின்றன.

இந்து வேதத்திலும், இந்துமதத்திலும்தான் **“அருளுலகப் பாதுகாப்புக் கலைகள் ஒன்பது”** என்று:-

ஆயகலைகள் - 64
அருட்கலைகள் - 48
கடவுட்கலைகள் - 9
தெய்வீகக் கலைகள் - 9
பேய்க் கலைகள் - 9
நோய்க் கலைகள் - 9
தேய்கலைகள் - 9
ஓய் கலைகள் - 9
மாய் கலைகள் - 9

எனும் ஒன்பது வகைப் பாதுகாப்புக் கலைகள் திட்ட வட்டமாக, தெளிவாக, எளிமையாக, விளக்கமாக வரையறைப் படுத்தி பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப் படுகின்றன.

இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இந்து மதத்தின் தலைமைப் பீடமான பதினெண்சித்தர் பீடத்தின் கீழ்:- 1. ஏமகோடி பீடங்கள், 2. காமகோடி பீடங்கள், 3. சோமகோடி பீடங்கள், 4. வாமகோடி பீடங்கள் எனப்படும் நான்கு வகைப்பட்ட பீடங்கள் பட்டியலிட்டு காட்டப்பட்டு இருக்கின்றன.

1. இந்த நான்கு பீடங்களிலும் ஒவ்வொரு பீடத்திலும் 243 வகை சத்தி பீடங்கள் இருக்கின்றன என்பதால் ஆக மொத்தம் சத்தி பீடங்கள் 972 ஆகின்றன.
2. இந்த நான்கு பீடங்களிலும் ஒவ்வொரு பீடத்திலும் 108 திருப்பதி பீடங்கள் இருக்கின்றன என்பதால் ஆக மொத்தம் திருப்பதி பீடங்கள் 432 ஆகின்றன.
3. இந்த நான்கு பீடங்களிலும் ஒவ்வொரு பீடத்திலும் 1008 சீவாலய பீடங்கள் இருக்கின்றன என்பதால் ஆக மொத்தம்

சீவாலய பீடங்கள் 4032 ஆகின்றன.

ஆகப் பதினெண்சித்தர் பீடத்தின் கீழ் 5436 பீடங்கள் (972+432+4032) ஆகின்றன.

இந்து வேதத்திலும் இந்து மதத்திலும்தான் அருளை ஊற்றெடுக்கச் செய்யும் சக்கரங்கள்; வழிபாட்டுக்குரிய அல்லது பூசைக்குரிய இடங்களையும், இடத்திலுள்ள வடிவங்களையும், 192 வகைப்பட்ட கோயில் உண்ணாழிகளையும், உயிர்ப்புச் செய்யும் குடமுழுக்குப் பூசைகளுக்கும் புத்துயிர்ப்புச் செய்யும் குடமுழுக்குப் பூசைகளுக்கும் பயன்படக் கூடிய திருப்பதிச் சக்கரங்கள் (108) நூற்றியெட்டும் சத்திபீடச் சக்கரங்கள் (243) இருநூற்றி நாற்பத்தி மூன்றும், சிவாலயச் சக்கரங்கள் (1008) ஆயிரத்தெட்டும் இவற்றை எழுதுவதற்குரிய அருளுலக முத்தமிழ் எழுத்துக்கள் (75) எழுபத்தைந்தும் பொருளுலக முத்தமிழ் எழுத்துக்கள் (247) இருநூற்று நாற்பத்தேழும், பீடாதிபதிக்குரிய முத்தமிழ் எழுத்து ஒன்றும் ஆக மொத்தம் (323) முன்னூற்று இருபத்தி மூன்று முத்தமிழ் எழுத்துக்கள் இருக்கின்றன.

இந்துவேதமும் இந்துமதமும் அருளப்பட்டுள்ள முத்தமிழ்மொழிதான், அண்டபேரண்டங்கள் ஆளுகின்ற சித்தர்களுடைய தாய்மொழியாகவும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியாகவும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியாகவும், கடவுளர் மொழியாகவும், தேவர் தேவதை மொழியாகவும், தெய்வீக மொழியாகவும், ஆண்டவர் மொழியாகவும், ... மொழியாகவும் மாறுத இளமையோடு கன்னித் தமிழ் மொழியாக இருக்கின்றது.

இந்து வேதமும், இந்து மதமும் அருளப் பட்டுள்ள அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியில் 1. சத்தி, 2. சித்தி, 3. முத்திகளைத் தருவதற்கும் 4. பிறவாமை, 5. இறவாமை, 6. பிறப்பு இறப்பு பிறப்பிறப்பற்ற பெருநிலையைப் பெறுவதற்கும், 7. கடவுளாகவே மாறுவதற்கும் உரிய பூசை மொழிகள் இருபத்தி மூன்று வகைப்பட்ட காயந்திரிகளாக இருக்கின்றன.

## இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் பத்தி வழி நான்கு இருக்கின்றன.

**திருமுறை பத்தி வழி:-** பத்தி உணர்வு மேலீட்டால் ஒருவர் தான் விரும்புகிற கடவுளையோ அல்லது கடவுளர்களையோ, தேவர் தேவதைகளையோ, தெய்வங்களையோ, ஆண்டவர்களையோ மனத்தளவில் எந்நேரமும் நினைத்துக் கொண்டு, உலகியலாக தனக்குள்ள உறவு, உரிமை, உறையுள், உடை, உணவு.... முதலிய அனைத்தையும் நினைக்காமல் இருந்த இடத்திலேயே கால் மடக்கி, கைகட்டி, வாய்புதைத்து, கண்மூடி ஆழ்ந்த தவத்தில் ஈடுபட்டிடுவதும், அல்லது அனைத்தும் மறந்தும் துறந்தும் கடவுள் நினைவாகவே எங்கும் நிலையின்றி அலைந்து திரிவதும் “திருமுறை பத்தி வழி” எனப்படும்.

**தருமுறை பத்தி வழி:-** பத்தி உணர்வு மேலீட்டால் ஒருவர் தான் விரும்புகிற கடவுளையோ, அல்லது கடவுளர்களையோ, தேவர் தேவதைகளையோ, தெய்வங்களையோ, ஆண்டவர்களையோ தனக்கு விருப்பமான பயிரினங்களின் கிழங்கு, வேர், தண்டு, இலை, பூ, காய், கனி, விதை, தானியங்கள் முதலியவற்றை சமைத்தும், சமைக்காமலும் படைத்துப் பூசை செய்து வழிபடும் நெறிமுறை “தருமுறை பத்தி வழி” எனப்படும்.

**கருமுறை பத்தி வழி:-** பத்தியுணர்வு மேலீட்டால் ஒருவர் தான் விரும்புகிற கடவுளையோ, அல்லது கடவுளர்களையோ, தேவர் தேவதைகளையோ, தெய்வங்களையோ, குடும்ப ஆண்டவர்களையோ தனக்கு விருப்பமான உயிரினங்களின் குருதியையும், சமைத்த இறைச்சியையும் படையலாகப் படைத்து பூசை செய்து வழிபடும் நெறிமுறை “கருமுறை பத்தி வழி” எனப்படும்.

**குருமுறை பத்தி வழி:-** ஒருவர் பத்தியுணர்வு மேலீட்டால் தான் விரும்பும் குருவையே கடவுளாக, தேவராக, தேவதையாக, தெய்வமாக, ஆண்டவராக ஏற்று ஒப்புக் கொண்டு நம்பி விரும்பி அவருக்குத் தொண்டு செய்து பூசை செய்து வழிபடும் நெறிமுறை “குருமுறை பத்தி வழி” எனப்படும்.

இந்து வேதத்தில் (108) நூற்றியெட்டுப் பூசை மொழி நூல்கள், (48) நாற்பத்தியெட்டுப் பூசை விதி நூல்கள், (96) தொண்ணூற்றாறு தத்துவ நூல்கள், (144) நூற்று நாற்பத்து நான்கு செயல் சித்தாந்த நூல்கள் என்று (108 + 48 + 96 + 144 = 396) ஆக மொத்தம் முன்னூற்றுத் தொண்ணூற்றாறு நூல்கள் இருக்கின்றன.

இந்து மதத்திலும் 1. கருவாக்கு, குருவாக்கு, தருவாக்கு, திருவாக்கு, அருள்வாக்கு, மருள்வாக்கு எனும் ஆறு வகைப்பட்ட வாக்கு நூல்கள், 2. கருவாக்கியம், குருவாக்கியம், தருவாக்கியம், திருவாக்கியம், அருள்வாக்கியம், மருள் வாக்கியம் எனும் ஆறு வகைப்பட்ட வாக்கிய நூல்கள், 3. கருவாசகம், குருவாசகம், தருவாசகம், திருவாசகம், அருள்வாசகம், மருள்வாசகம் எனும் ஆறு வகைப்பட்ட வாசக நூல்கள், 4. அத்தரம், சாத்தரம், சூத்தரம், தோத்தரம், நேத்தரம், வேத்தரம் எனும் ஆறு வகைப்பட்ட தர நூல்கள், 5. அத்திரம், சாத்திரம், சூத்திரம், தோத்திரம், நேத்திரம், வேத்திரம் எனும் ஆறு வகைப்பட்ட திர நூல்கள், 6. அத்திறம், சாத்திறம், சூத்திறம், தோத்திறம், நேத்திறம், வேத்திறம் எனும் ஆறு வகைப்பட்ட திற நூல்கள் என்று ஆக மொத்தம் முப்பத்தாறு (36) நூல்களைப் பெற்றிருக்கின்றன.

இந்து வேதத்துக்குரிய 396 நூல்களிலுமுள்ள கருத்துக்களும், செய்திகளும், இருக்கு வேதம், அசுர வேதம், அதர்வான வேதம், யாம வேதம் எனும் நான்கு வேதங்களில் சுருக்கமாக விளக்கி யுரைக்கப் பட்டிருக்கின்றன.

இந்து வேதக் கருத்துக்களும் செய்திகளும் இருக்கு வேதத்தில் (1,10,592) ஒரு இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று தொண்ணூற்றிரண்டு உரைக்கோவை வாசகங்களாக இருக்கின்றன. அசுர வேதத்தில் (1,10,592) ஒரு இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று தொண்ணூற்றிரண்டு வாக்குகளாக இருக்கின்றன. அதர்வான வேதத்தில் (1,10,592) ஒரு இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று தொண்ணூற்றிரண்டு வாக்கியங்களாக இருக்கின்றன. சாம வேதத்தில் (யாம வேதத்தில்)

1,10,592 ஒரு இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று தொண்ணூற்றிரண்டு வாசகங்களாக இருக்கின்றன.

இந்த நான்கு வேதங்களிலும் உள்ள உரைக்கோவை வாசகங்கள், வாக்குகள், வாக்கியங்கள், வாசகங்கள் அனைத்திலும் ‘கருவாக உள்ள’ அதாவது, ‘சூல்’ ஆக உள்ள (சூல் = கரு) மையக் கருத்துக்கள் ஒரு வரி முதல் பல வரிகள் வரை உள்ள சுருக்கமான வாசகங்கள் **சூலகம்** (சுலோகம்) என்ற பெயரில் எளிதில் மனப்பாடம் செய்து மனதில் நிலை நிறுத்திக் கொள்ளும் வண்ணம் 4,42,368 (நான்கு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து முந்நூற்று அறுபத்தெட்டு) தனித்தனி கருத்துக்களாக, கருத்துச் சொற்றொடர்களாக எழுதப் பட்டிருக்கின்றன. இந்தச் ‘சூலகம்’ என்ற சொல்லே, நாளடைவில் பேச்சு வழக்கில் ‘சுலோகம்’ என்றாயிற்று.

இந்து மதத்தில் உள்ள ஒவ்வொரு நூலிலும் 4800 சூழ்ச்சித் திறமிக்க கருத்துரைகள் (சூழ்ச்சி + இதங்கள் = சூட்சிதங்கள் => சூட்சங்கள் => சூக்தங்கள்) இருக்கின்றன. இந்தக் கருத்துரைகள் சூக்தங்கள் எனப்படுகின்றன. எனவே, இந்து மதத்தில் உள்ள 36 நூல்களில் மொத்தம் உள்ள கருத்துரைகள், 1,72,800 (ஓர் இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எண்ணூறு) சூக்தங்களாக இருக்கின்றன.

இந்து வேதத்திற்குரிய (396) முன்னூற்றுத் தொண்ணூற்றாறு நூல்களும், இந்து மதத்திற்குரிய (36) முப்பத்தாறு நூல்களும் சேர்த்து ஆக மொத்தம் உள்ள 432 நூல்களிலும் குறிக்கப் படுகின்ற கடவுள்களின் மொத்த வகை (8,84,736) எட்டு இலட்சத்து எண்பத்து நாலாயிரத்து எழுநூற்று முப்பத்தாறு ஆகும். இதில் ஒவ்வொரு வகையிலும் கோடிக்கணக்கான கடவுளர்கள் இருக்கின்றார்கள்.

இந்து வேதத்திலும், இந்து மதத்திலும் மனிதர்களில் அங்கங்களின் வடிவங்களின் வகைகளாலும்; உடல் வண்ணங்களின் வகைகளாலும், தோற்றப் பொலிவுகளின் வகைகளாலும்; பேசுகின்ற மொழிகளின் வகைகளாலும் உள்ள எண்ணற்ற வேறுபாடுகளைக் கொண்டு ‘ஒரே

ஒரு கடவுள்தான்' இருக்கிறுர் அல்லது இருக்க முடியும் என்று கூறும் கருத்துப் பிழையானது, தவறுனது, பொய்யானது, அறிவுக்குப் பொருந்தாதது, ஏமாளித்தனமானது, சிறுபிள்ளேத்தனமானது ... என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஏனென்ருல், ஒரே ஒரு கடவுள் இருந்திருந்தால், அல்லது இருப்பாரேயாஞல், எல்லா மனிதர்களேயும் ஒரே மாதிரியாகப் படைத்திருப்பார்; எல்லா மானுடர்களுக்கும் ஒரே ஒரு மொழியைத் தந்திருப்பார்; எல்லா மானுடர்களேயும் ஒற்றுமையாக வாழச் செய்திருப்பார்; எல்லா மானுடரையும் ஒரே ஒரு கடவுளேக் கும்பிடச் செய்திருப்பார்; உலகில் ஒரே ஒரு மதமே இருக்கும்படிச் செய்திருப்பார்; உலகம் முழுவதுமுள்ள மக்கள் ஒரே நாட்டவராக வாழும்படிச் செய்திருப்பார் என்று கூறப்படுகிறது.

இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்,

***"'ஒரு மொழிக்குரிய கடவுளர்கள் அந்த மொழியினருக்கு மட்டுமே உதவிடுவார்கள்';***

***'ஓர் இனத்துக்குரிய கடவுளர்கள் அந்த இனத்தவருக்கு மட்டுமே உதவிடுவார்கள்';***

***'ஒரு நாட்டுக்குரிய கடவுளர்கள் அந்த நாட்டவருக்கு மட்டுமே உதவிடுவார்கள்'.***

எனவே ஒவ்வொரு நாட்டு மக்களும் அவரவர் நாட்டுக்குரிய கடவுளர்களே மட்டும்தான் கும்பிட வேண்டும்; ஒவ்வோர் இனத்தவரும் அவரவர் இனத்துக்குரிய கடவுளர்களே மட்டும்தான் கும்பிட வேண்டும்; ஒவ்வொரு மொழியினரும் அவரவர் மொழிக்குரிய கடவுளர்களே மட்டும்தான் கும்பிட வேண்டும்" என்று கூறப்படுகிறது.

அண்டபேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகுக்கு மனுநீதியார் தலேமையில் அனுப்பப் பட்டிட்ட பதினெண்சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்புகள், முப்பத்துமூன்று கோடி தேவர்கள் குழு, நாற்பத்தெட்டு கோடி இருடிகள் குழு, ஒரு கோடி தேவதைகள் குழு, தொண்ணூற்ருறு கோடி கணங்கள் குழு, நூற்றெட்டு கோடி

முனிவர்கள் குழு எனும் ஏழு குழுக்களும் அனாதிக்காலம் எனப்படுகின்ற 4,85,920 ஆண்டுகள் கால இடைவெளியில் நிகழ்த்திய ஆய்வுகளின் அடிப்படையில் உருவாக்கப் பட்டதே மனுநீதி. இது மனு சாத்தரம், மனு சாத்திரம், மனு சாத்திறம், மனு நெறி, மனு முறை, மனு விதி, மனு ஒழுகலாறு எனும் ஏழு மாபெரும் அங்கங்களை யுடையது. இவற்றின் அடிப்படையில்தான், இந்து வேதத்தின் 396 நூல்களும், இந்துமதத்தின் 36 நூல்களும் இம்மண்ணுலகிற்கென அண்டபேரண்டமாளும் மூலப் பதினெண்சித்தர்களால் அருளப்பட்டன.

அண்டபேரண்டங்களை ஆளுகின்ற மூலப் பதினெண்சித்தர்கள், மனுநீதியார் வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில்; இம்மண்ணுலகின் பண்பாடற்ற மனிசர்களை பண்பாடு பெற்ற மனதையுடைய மனிதர்களாக மாற்றுவதற்காகவே ஆதிசிவனார் இம்மண்ணுலகுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் தன்னோடு அழைத்து வந்திட்ட பதினெண்சித்தர் குழு, பதினெட்டாம்படிக் கருப்புகள் குழு, நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுளர்கள் குழு, நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர் குழு, நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர்கள் குழு எனும் ஐவர் குழுவின் துணையோடு திருவுலகமான அருளுலகச் செல்வங்களை இம்மண்ணுலகுக்கு வழங்கிட உரிய இடத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கு **திருவிடம்** என்று பெயரிட்டு அங்குப் பத்தியுணர்வுள்ள மனிசர்களை ஒன்று கூட்டினார்.

அப்படி, ஒன்று கூட்டப் பட்டவர்களுக்கு, பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியைக் கற்பித்து அவர்களைத் தமிழர்களாக்கினார். அத்தமிழர்களுக்கு திருவுலகச் செல்வங்களான இந்து வேதத்தில் 396 நூல்களையும், இந்து மதத்தின் 36 நூல்களையும் கற்பித்து அவர்களைத் திருவிடச் செல்வங்களையுடைய திராவிடர்களாக, திருவிடத்தில் தயாராகிட்ட திராவிடர்களாக, திருவிடத்திற்குரிய இந்துவேத இந்துமத அறிவுடைய திராவிடர்களாக,

அருளுலகப் பத்தியுணர்வுடைய திராவிடர்களாக, செல்வங்களான சத்தி, சித்தி, முத்தி எனும் திருவருட் செல்வங்களுடைய திராவிடர்களாக மாற்றினர்.

ஆதிசிவனர் அனுதிக் காலத்தின் இறுதியில் அதாவது மணீசர்கள் தோன்றி, 4,85,920 ஆண்டுகள் கழித்து முதல் யுகத்தின் ஆரம்பத்தில் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அருளினர். அவர், இந்துவேத நூல்களையும், இந்துமத நூல்களையும், பதினெண்சித்தர்களின் தாய்மொழியும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும் அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியில் அருளினர்.

எனவேதான், அவருக்குப் பிறகு முதல் உகமான கீரன் உகத்திற்குரிய (கிரேதாயுகம்) 17,28,080 ஆண்டுகளும், இரண்டாவது உகமான தீரன் உகத்திற்குரிய (திரேதாயுகம்) 12,90,000 ஆண்டுகளும், மூன்றுவது உகமான தூரன் உகத்திற்குரிய (துவாபர யுகம்) 8,64,000 ஆண்டுகளும், நான்காவது உகமான கலியன் உகத்தில் (கலியுகம்) 2000 ஆண்டுகளும் என்று ஆக மொத்தம் (17,28,080 + 12,90,000 + 8,64,000 + 2,000 = 38,84,080) முப்பத்தெட்டு இலட்சத்து எண்பத்து நாலாயிரத்து எண்பது ஆண்டுகள் கழித்து நாராயணர் என்பவர் இந்துவேத, இந்துமத நூல்களின் அடிப்படையில் சமசுக்கிருத மொழியில் ஹிந்து வேதம் நூல்களையும், ஹிந்துமத நூல்களையும் எழுதினர்.

இந்த சமசுக்கிருத மொழியில் உள்ள ஹிந்துவேத ஹிந்துமத நூல்களில், ஆதிசிவனர் அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியில் அருளியுள்ள இந்து வேத நூல்களிலும், இந்துமத நூல்களிலும் இல்லாத 1. சாத்திரங்களும், 2. சம்பிரதாயங்களும், 3. சடங்குகளும், 4. விரதங்களும், 5. திருநாள்களும், 6. திருவிழாக்களும், 7. பூசைவிதிகளும், 8. கடவுளர் தேவர் தேவதை பற்றிய புராணங்களும், 9. இதிகாசங்களும், 10. சாதிப் பிரிவுகளும், 11. சாதி ஏற்றத் தாழ்வுகளும், 12. தீண்டாமைகளும், 13. வருணசிரமக் கொள்கைகளும், 14. சனதன

தர்மங்களும், 15. மனித அப்பாற்பட்ட நீதிகளேயுடைய மனுநீதி (மனதிற்கு அப்பாற்பட்ட நீதிகளேயுடையது மனுநீதி) என்ற மனுநீதி தர்மச் சாத்திரமும், 16. அறிவுக்குப் பொருந்தாத செய்திகளும், 17. பயனளிக்காத பூசைகளும் .... இருக்கின்றன.

இந்த சமசுக்கிருத மொழியிலுள்ள ஹிந்துவேதத்தையும், ஹிந்துமதத்தையும் பல்வேறு வகையான சூழ்நிலேகளாலும், கட்டாயங்களாலும் நம் மக்கள் விரும்பி ஏற்றுக் கொண்டிட்ட காரணத்திஞல்தான் நமக்கென்று ஆதிசிவனுர் பகுத்தறிவுப் பூர்வமாக தமிழ்மொழியில் வழங்கிய இந்து வேதமும், இந்து மதமும் மறுக்கப்பட நேரிட்டன, வெறுக்கப்பட நேரிட்டன, இழித்துப் பழிக்கப்பட்டன, வெறுத்து ஒதுக்கப்பட்டன, சீராட்டப் படாமல் புறக்கணிக்கப் பட்டன. எனவே, ஆதிசிவனுர் தமிழ்மொழியில் அருளியுள்ள பயன்மிக்க பகுத்தறிவுப் பூர்வமான இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் மறக்கப் பட்டுவிட்டன, மறக்கப் பட்டுவிட்டன, மறக்கப் பட்டுவிட்டன.

இம்மாபெரும் சோக வரலாற்றைச் சொல்லித்தான், இம்மாபெரும் சோக வரலாற்றைச் சொல்லித்தான், இம்மாபெரும் சோக வரலாற்றைச் சொல்லித்தான், அண்டபேரண்டமாளும் மூலப் பதினெண்சித்தர்களால் இம்மண்ணுலகம் முழுவதுமுள்ள எல்லா நாட்டவருக்கும், எல்லா மொழியினருக்கும், இனத்தவருக்கும் நல்வாழ்வை விளேவித்துத் தருவதற்காக அருளப்பட்ட மனுநீதி நூல்களும், இந்துவேத நூல்களும் மீண்டும் செல்வாக்குப் பெற்று உலக மக்களே பாதுகாக்கும்படிச் செய்யவேண்டும்.

இதற்காகத்தான் பதினெண்சித்தர் மடம் இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ.ம.இ.), இந்துவேத முன்னேற்றக் கழகம் (இ.மு.க.), அருட்பணி விரிவாக்கத் திட்டம் (அ.வி.தி.), இந்து வேதாகம பாடசாலே, குண்டலினி, குண்டளினி, குண்டழினி ஆசிரமம்; ஓகாசனம், யோகாசனம், மோகாசனம், போகாசனம் கற்பிக்கும் தவச்சாலே; அருளே அநுபவப் பொருளாக வழங்கி மக்களின் அனேத்து வகையான பாதிப்புக்களேயும் அகற்றும் இருக்குவேத யாகசாலே

அருட்கோட்டம், அதர்வான வேத யாகசாலை அருட்கோட்டம், யாமவேத யாகசாலை அருட்கோட்டம், ... முதலிய அமைப்புக்களை நாடெங்கும் நிறுவி ***"இந்து வேதம் வளர்ப்போம்! இந்துமதம் காப்போம்!"*** என்ற கொள்கை முழக்கத்தோடு செயல்பட்டு வருகிறது.

இந்துவேதத்திலும் இந்துமதத்திலும்தான் மனதின் உணர்வுகளுக்கும், சிந்தனையின் எண்ணங்களுக்கும், மனமும் சிந்தையும் இணைந்த செயல்நிலைகளுக்கும் உரிய ஞானம், அகஞானம், புறஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் எனும் ஐந்து வகைப்பட்ட அறிவியல்களும் தெள்ளத் தெளிவாக வகைப்படுத்தி தனித்தனியாக வேறுபடுத்தி விளக்கமாக வழங்கப் பட்டிருக்கின்றன.

எந்த நாட்டில் உள்ள ஒரு கடவுளும், தன் நாட்டை விட்டு வேற்று நாட்டில் வந்து தங்கி புதிய வேற்று நாட்டு மக்களுக்கு அருளை வழங்கி பாதுகாப்பதில்லை, பாதுகாப்பதில்லை, பாதுகாப்பதில்லை. மேலும், எல்லா நாட்டுக் கடவுளர்களுமே, தங்களை விரும்பி வணங்கி பூசை செய்பவர்கள் எந்த நாட்டிலிருந்தாலும் அவர்கள் தன்னைத் தேடி தான் வாழுகின்ற நாட்டிற்கு வந்துதான் பூசைசெய்து வணங்கி வழிபட்டு அருள் பெற்றுச் செல்ல வேண்டும் என்று விரும்புகின்றனர். இப் பேருண்மையினை எல்லோரும் தெரிந்து அறிந்து ஆராய்ந்து புரிந்து தெளிந்து கொள்வதற்காகத்தான்;

> ***'எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் வேற்று நாட்டுக் கடவுளர்களை, அந்நிய நாட்டுக் கடவுளர்களை கும்பிடத் தேவையில்லை, பூசை செய்யத் தேவையில்லை, வணங்கிடத் தேவையில்லை, வழிபடத் தேவையில்லை, ஏற்றுப் போற்றிப் பேணித் தொழுகை செய்திடத் தேவையில்லை, அழுகை செய்திடத் தேவையில்லை, எள்ளல் செய்யத் தேவையில்லை, ஏசல் செய்யத் தேவையில்லை'***

என்ற கருத்தை அழுத்தந் திருத்தமாக, ஆணித்தரமாக, தெள்ளத் தெளிவாக, திட்டவட்டமாகக் கூறுகின்றன இந்து வேத நூல்களும், இந்து மத நூல்களும்.

இந்து வேத நூல்களும், இந்து மத நூல்களும் எந்த ஒரு மொழிக்குரிய கடவுளும் வேற்று மொழியைக் கற்றுக் கொண்டு அம்மொழியினரின் பூசை மொழிகளையும், வேண்டுகோள்களையும் ஏற்றுப் புரிந்து அருள் வழங்குவதில்லை. அதாவது, எந்த ஒரு மொழிக்குரிய கடவுளானாலும் சரி, அக்கடவுள் தன்னைப் பூசைசெய்ய, வணங்க, வழிபட்டிட, கும்பிட்டிட, அழுகை செய்திட, தொழுகை செய்திட, எள்ளல் செய்திட, ஏசல் செய்திட தனக்குத் தெரிந்த மொழியைக் கற்றுக் கொண்டு அம்மொழியிலேயே தன்னோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

எனவே, எந்தவொரு மொழிக்காரர்களும், வேற்று மொழிக்குரிய அந்நிய மொழிக்குரிய கடவுளர்களை வணங்கிடத் தேவையில்லை, வழிபடத் தேவையில்லை, கும்பிடத் தேவையில்லை, பூசை செய்யத் தேவையில்லை, அழுகை செய்திடத் தேவையில்லை, தொழுகை செய்திடத் தேவையில்லை, எள்ளல் செய்திடத் தேவையில்லை, ஏசல் செய்திடத் தேவையில்லை - என்று மிகமிகத் தெளிவாக திட்டவட்டமாக வரையறை செய்து கூறுகின்றன.

இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் எந்த ஓர் இனத்துக்குரிய கடவுள்களும் வேற்று இனத்துக்குரிய கட்டிடக் கலை முறைகளில் தங்களுடைய கோயில்களைக் கட்ட அனுமதிப்பதில்லை. இதேபோல், எந்த ஓர் இனத்துக்குரிய கடவுள்களும் வேற்று இனத்தாருடைய கோயில்களில் உள்ள தூப தீப முறைகளையும், பூசை விதிகளையும், பூசனைப் பொருட்களையும், படையல் பொருட்களையும், பயன்படுத்தப் படுகின்ற இசைக் கருவிகளையும், உணவுப் பொருட்களையும், பலகார வகைகளையும் ஏற்றுக் கொள்வதில்லை, ஏற்றுக் கொள்வதில்லை, ஏற்றுக் கொள்வதில்லை, ஏற்றுக் கொள்வதில்லை, ஏற்றுக் கொள்வதே யில்லை என்பதால்; எந்தவொரு இனத்துக்குரிய கடவுள்களும் வேற்று இனத்து மக்களை ஏற்று அருள் புரிந்து பாதுகாப்பதில்லை, நலமளிப்பதில்லை! பாதுகாப்பதில்லை, நலமளிப்பதில்லை! பாதுகாப்பதில்லை, நலமளிப்பதில்லை! என்பதுதான் உண்மை.

இந்த உண்மையை எண்ணி எந்த ஓர் இனத்து மக்களும் வேற்று இனத்துக்குரிய கடவுள்களை வணங்குவதில் பயனில்லை, வழிபடுவதில் பயனில்லை, கும்பிடுவதில் பயனில்லை, பூசைசெய்வதில் பயனில்லை, அழுகை செய்வதில் பயனில்லை, தொழுகை செய்வதில் பயனில்லை, எள்ளல் செய்வதில் பயனில்லை, ஏசல் செய்வதில் பயனில்லை என்று மிகமிகத் தெளிவாக திட்டவட்டமாக, அழுத்தந் திருத்தமாக, ஆணித்தரமாகக் குறிப்பிடப் படுகிறது.

# கொள்கை விளக்க முழக்கங்கள்

1. அமைப்போம்! அமைப்போம்! அருளாட்சி அமைப்போம்!
2. அகற்றுவோம்! அகற்றுவோம்! சாதிகளை அகற்றுவோம்!
3. அமைப்போம்! அமைப்போம்! சமத்துவ வாழ்வை!
4. உருவாக்குவோம்! உருவாக்குவோம்! ஒற்றுமை வாழ்வை!
5. நிலைநாட்டுவோம்! நிலைநாட்டுவோம்! அமைதியை நிம்மதியை!
6. உழைப்போம்! உழைபோம்! இந்துவேதம் தழைக்க!
7. பாடுபடுவோம்! பாடுபடுவோம்! இந்து மதம் பிழைக்க!
8. கும்பிடுவோம்! கும்பிடுவோம்! நம்மைக் காணவரும் கடவுளை!
9. பூசைசெய்வோம்! பூசைசெய்வோம்! நம்மால் காணக்கூடிய கடவுளை!
10. போற்றுவோம்! போற்றுவோம்! குலதெய்வங்களை, கிராமத்துத் தேவர் தேவதைகளை!
11. கொண்டாடுவோம்! கொண்டாடுவோம்! நாட்டுக் கடவுள்களை!
12. பத்தி செய்வோம்! பத்தி செய்வோம்! குடும்ப ஆண்டவர்களை!
13. நமக்குரியவர்கள் நமது மொழிக்குரிய கடவுள்களே!
14. நமக்குரியவர்கள் நமது நாட்டுக்குரிய கடவுள்களே!
15. நமக்குரியவர்கள் நமது அகப்பண்பாட்டை ஏற்கும் கடவுள்களே!
16. நமக்குரியவர்கள் நமது புறநாகரீகத்தை ஏற்கும் கடவுள்களே!
17. நமக்குரியவர்கள் நமது உணவு வகைகளை ஏற்கும் கடவுள்களே!
18. நமக்குரியவர்கள் நமது இசையை ஏற்கக் கூடிய கடவுள்களே!

19. நமக்குரிய கடவுள்கள் நமது உடைவகைகளை ஏற்கக் கூடிய கடவுள்களே!
20. நமக்குரிய கடவுள்கள் நமது கட்டிடக் கலைகளை ஏற்கக்கூடிய கடவுள்களே!
21. நமக்குரிய கடவுள்கள் நமது பூசைமுறைகளை ஏற்கக் கூடிய கடவுள்களே!
22. நமக்குரிய கடவுள்கள் நமது பாதிப்புக்களுக்கு பரிகாரம் தரும் கடவுள்களே!
23. நமக்குரிய கடவுள்கள், நம் நாட்டில் பிறந்து வளர்ந்த கடவுள்களே!
24. நமக்குரிய கடவுள்கள் நமது தாய்மொழியைப் புரிந்து கொள்ளக்கூடிய கடவுள்களே!
25. நமக்குரிய கடவுள்கள் நமது மண்ணின் மைந்தர்களே!
26. கும்பிடு! கும்பிடு! உனக்கு விருப்பமான கடவுளைக் கும்பிடு!
27. கும்பிடு! கும்பிடு! உன் குடும்ப ஆண்டவர்களைக் கும்பிடு!
28. கும்பிடு! கும்பிடு! உன் குலதெய்வங்களைக் கும்பிடு!
29. கும்பிடு! கும்பிடு! உன் கிராமத்து தேவர் தேவதைகளைக் கும்பிடு!
30. கும்பிடு! கும்பிடு! உன் நாட்டுக் கடவுள்களைக் கும்பிடு!
31. கும்பிடு! கும்பிடு! உனக்கு விருப்பமான படையலைப் படைத்துக் கும்பிடு!
32. கும்பிடு! கும்பிடு! உன்னால் முடிந்தவைகளைப் படைத்துக் கும்பிடு!
33. கும்பிடு! கும்பிடு! உனக்குத் தெரிந்த பாடல்களைப் பாடிக் கும்பிடு!
34. கும்பிடு! கும்பிடு! உன் ஊரில் உள்ள இசைக் கருவிகளை இயக்கிக் கும்பிடு!
35. கும்பிடு! கும்பிடு! தீச்சட்டி எடுத்துக் கும்பிடு!
36. கும்பிடு! கும்பிடு! காவடி எடுத்துக் கும்பிடு!
37. கும்பிடு! கும்பிடு! தீமிதி விழா எடுத்துக் கும்பிடு!
38. கும்பிடு! கும்பிடு! ஒன்பது வகை நீர்க்குடங்களை எடுத்துக் கும்பிடு!

39. கும்பிடு! கும்பிடு! அருள் வந்து ஆடிக் கும்பிடு! என்றெல்லாம் முழக்கங்களை முழக்கி எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! எல்லாம் தமிழ்! என்று செயல்பட புறப்பட்டிடுங்கள்

**வழங்குபவர்:**
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை
13, குமாரசாமி தெரு, வரதராசபுரம்
அம்பத்தூர், சென்னை-53,
**வெளியீடு எண்: 456**

***(அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் இயங்கும் இந்து வேதாகம பாடசாலையின் முதல்நிலை பாடத் திட்டப் புத்தகம். இதுவே இளஞ்சிறூர்களுக்கும் உரியதாக்கப் பட்டிருக்கிறது.)***

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: தட்டச்சு நகலாகக் கிடைத்தது//**



மெய்ஞ்ஞானக்கொடி

# இ.மு.க. கொள்கை விளக்கச் சுருக்கம்

## I. இந்து வேதமும், தமிழர்களும்:

1. தமிழ்மொழியில்தான் இந்து வேதம் இருக்கின்றது.
2. தமிழ்மொழிதான் அண்டபேரண்ட ஆட்சி மொழி.
3. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான்; இந்த உலகில் முதல் வேதமாக, சமத்துவ வேதமாக, சமாதான வேதமாக, உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கும் வேதமாக, உலக மொழி விடுதலை, இன விடுதலை, நாட்டு விடுதலை எனும் மூன்று விடுதலைகளையும் வலியுறுத்தும் வேதமாக இருக்கின்றது.
4. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் குடும்ப ஆண்டவர், குலதெய்வம், கிராமதேவர் தேவதை, நாட்டுக் கடவுளர் என்ற அருளுலகில் உள்ள நான்கு பெரும்பிரிவுகளை விளக்கிக் கூறுகிறது.
5. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் மனிதர்கள் கடவுளாக மாறுகிறுர்கள் என்ற பேருண்மையை விளக்குகிறது.
6. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழியைப் பெற்றிருக்கின்றது.
7. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் ஆதிசிவனுரால் இம்மண்ணுலக மணீசர்களில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான் தமிழர்கள் (ஆக) ஆக்கப் பட்டார்கள் என்ற பேருண்மையை விளக்குகிறது.
8. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் தமிழர்கள்தான் அருளுலகின் தலைவர்கள், மூலவர்கள், காவலர்கள், நாயகர்கள், வாரிசுகள், வித்துக்கள், சொத்துக்கள் என்று மிகத் தெளிவாக தமிழர்களுக்கு உரிமையையும், பெருமையையும் தருகின்றது.

# II. இந்துவேதமும் தமிழ்மொழியும்

1. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் தமிழ்மொழியின் எழுத்துக்களின் மூலம் அருளுலக பொருளுலகப் பாதுகாப்புக்களுக்குரிய சக்கரங்களையும், சிலைகளுக்குரிய உயிர்ப்பு சக்கரங்களையும், புத்துயிர்ப்புச் சக்கரங்களையும் உருவாக்கக் கூடிய நெறிமுறைகளை விளக்குகிறது.
2. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் மந்திரங்களை அதாவது பூசைமொழிகளை தமிழ்மொழியின் ஒலிநயம் கெடாமல் மாற்று மொழியினர் எந்த அளவிற்கு உச்சரிக்கின்றார்களோ அந்த அளவிற்கு சித்திகள் கிடைக்கும், அருட்பயன்கள் கிடைக்கும் என்று கூறுகிறது.
3. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் தமிழ்மொழியை ஆண்டவர் மொழி, தெய்வமொழி, தேவமொழி, வேதமொழி, கடவுளர் மொழி, அண்டபேரண்ட அருளாட்சி மொழி என்று விளக்குகிறது, உரிமையையும் பெருமையையும் தருகிறது.
4. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் இந்த உலகின் முதல்மொழி, மூலமொழி, தாய்மொழி, கருமொழி, அடிப்படை மொழி, ஆதார மொழி, அருள்மொழி என்று விளக்குகிறது, பெருமைப் படுத்துகிறது.

# III. இந்துவேதமும் தமிழ்நாடும்

1. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் இந்த உலகின் முதன்முதலில் தோன்றிய நிலப் பரப்புகளில் தொன்மையான பெரிய நிலப்பரப்பு தமிழ்நாடுதான் என்று மிகத் தெளிவாக விளக்குகிறது.
2. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் அண்டபேரண்டம் முழுவதும் உள்ள அருளுலகத்தவர்களும், இந்த உலகம் முழுவதும்

உள்ள அருளுலகத்தவர்களும் வந்து தங்கக் கூடிய கடவுளர்களின் நாடு தமிழ்நாடுதான் என்று விளக்குகிறது, பெருமைப் படுத்துகிறது.

3. தமிழில் உள்ள இந்துவேதம்தான், இந்த உலகில் உள்ள எல்லா வகைப்பட்ட வடிவமைப்புக்களையும், வண்ண அமைப்புக்களையும் உடைய மனிதர்கள் பிறந்து கொண்டே யிருக்கின்ற நாடு தமிழ்நாடுதான் என்று கூறுகிறது, பெருமைப்படுத்துகிறது.
4. தமிழில் உள்ள இந்துவேதம்தான் தமிழ்நாடுதான் அருளுலகின் நாற்றங்காலாக, நாற்றுப் பண்ணையாக, விதைப் பண்ணையாக இருக்கின்றது என்று கூறுகிறது, பெருமைப் படுத்துகிறது.
5. தமிழில் உள்ள இந்துவேதம்தான் எல்லா வகைப்பட்ட கடவுளர்களின் வழிபாடுகளும் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன என்று மிகத் தெளிவாகக் கூறுகிறது, பெருமைப் படுத்துகிறது.
6. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் எல்லா வகைப்பட்ட கோயில்களும் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன, இருக்க முடியும் என்று கூறுகிறது, பெருமைப் படுத்துகிறது.
7. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான் தமிழ்நாட்டில்தான் வாழையடி வாழையென தொடர்ந்து அருளாளர்கள் என்றென்றைக்கும் தோன்றிக் கொண்டேயிருக்க முடியும் என்று கூறுகிறது, பெருமைப் படுத்துகிறது.

# IV. இந்து வேத முழக்கங்கள்

1. தமிழ்மொழியின் விழிச்சியே அருளுலக விழிச்சி, பொருளுலக விழிச்சி!
2. தமிழ்மொழியின் எழிச்சியே அருளுலக எழிச்சி, பொருளுலக எழிச்சி!
3. தமிழ்மொழியின் வளர்ச்சியே, அருளுலக வளர்ச்சி, பொருளுலக வளர்ச்சி!
4. தமிழ்மொழியின் ஆட்சியே; அருளுலக ஆட்சி, பொருளுலக ஆட்சி!

5. தமிழ்மொழியின் விடுதலையே, அருளுலக விடுதலை, பொருளுலக விடுதலை!
6. தமிழ்மொழியே அருளுலகம்.
7. தமிழ்மொழியைப் பேசுவதே சிறந்த பூசை, சிறந்த தவம்.
8. தமிழ்மொழியே பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைத் தரும்.
9. தமிழ்மொழியே கல்லையும், புல்லையும் காணும் பொருள் அனைத்தையும் கடவுளாக்கிடும்.
10. தமிழர்களின் மலர்ச்சியே அருளுலகப் பொருளுலக மலர்ச்சி.
11. தமிழர்களின் செழிச்சியே அருளுலகப் பொருளுலக செழிச்சி.
12. தமிழர்களின் வளவளர்ச்சியே அருளுலகப் பொருளுலக வளவளர்ச்சி.
13. தமிழர்களே உலக ஆன்ம நேய ஒருமைப்பட்டை உருவாக்க முடியும்.
14. தமிழர்களே உலகம் முழுவதும் இன விடுதலையை காப்பாற்ற முடியும்.
15. தமிழர்களே உலகம் முழுவதும் நாட்டு விடுதலையை காப்பாற்ற முடியும்.
16. தமிழர்களே உலகச் சகோதரத் தத்துவத்தை உருவாக்க முடியும்.
17. தமிழர்களே உலக ஒற்றுமையை உருவாக்க முடியும்.
18. தமிழர்களே உலக அமைதியைக் காப்பாற்ற முடியும்.
19. தமிழர்களே உலக மானுடப் பண்பாட்டின் விழியாக இருக்க முடியும்.
20. தமிழர்களே உலக மானுடப் பண்பாட்டின் வழியாக இருக்க முடியும்.
21. தமிழர்களே உலக மானுடப் பண்பாட்டிற்கு வழிகாட்டியாக இருக்க முடியும்.
22. தமிழர்களே மானுடப் பண்பாட்டைப் பாதுகாக்கும் துணைவர்களாக இருக்க முடியும்.
23. தமிழர்கள் ஒற்றுமைப்பட்டால்தான் உலக ஒற்றுமை உருவாகும்.

## இந்து வேதம்தான் இ.மு.க.வின் கொள்கை.

- இந்துவேதத்தின் வெறியல்ல; இ.மு.க.வின் கொள்கை; இந்து மதத்தின் நெறியே, இ.மு.க.வின் கொள்கை;
- இ.மு.க.வினுல்தான் தமிழர்கள் உரிமைகளையும், பெருமைகளையும் மீட்டுத் தர முடியும், கட்டிக் காத்திட முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழ்மொழியின் ஆட்சிமாட்சியைப் பெற முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழர்களின் வீழ்ச்சி நிலைகளையும், தாழ்ச்சி நிலைகளையும் அகற்ற முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழ்மொழி இன நாட்டு வரலாற்றுத் தொன்மைகளையும், மேன்மைகளையும், நன்மைகளையும் விளக்கிட முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழர்களை ஒன்றுதிரட்ட முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழர்களை ஒற்றுமைப்படுத்த முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்ட முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழர்களின் தன்மான உணர்வு விழிச்சியும், எழிச்சியும், உயர்ச்சிமிகு செழிச்சியும் பெற முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழ் இன உணர்வு வடிவப்பட்டு வாழ்வுறச் செய்ய முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழரின் வரலாற்றுப் பேருண்மைகளை வெளிக் கொணர முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழ்ப் பண்பாட்டின் அருமை பெருமைகளை வெளிக் கொணர முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழர் நாகரீகத்தின் சிறப்புக்களும், பயன்களும் விளக்கி உரைக்கப் பட்டு நிலைநாட்டப் பட்டிட முடியும்.
- இ.மு.க.வினுல்தான் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கண வளங்கள் உலகுக்கு அறிவிக்கப் பட்டுவிடும். இ.மு.க.வினுல்தான்

தமிழ்மொழியின் தெய்வீகத் தன்மைகள், கடவுட் தன்மைகள் விளக்கப் பட்டிட முடியும்.

♦ இ.மு.க.விஞல்தான் தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும், தமிழ் நாட்டையும் பெருமைப் படுத்திட முடியும்.

எனவே, எல்லோரும் இ.மு.க.வின் உறுப்பினராகுங்கள். எனவே, எல்லோரும் இ.மு.க. உறுப்பினராகுங்கள், எனவே, எல்லோரும் இ.மு.க. உறுப்பினராகுங்கள்.

**வெற்றி நமதே! நாளை நமதே!**

திரட்டுவோம் திரட்டுவோம், அருட்படை திரட்டுவோம்!

வளர்ப்போம் வளர்ப்போம், இந்துவேதம் வளர்ப்போம்!

அமைப்போம் அமைப்போம், அருளாட்சி அமைப்போம்!

ஒற்றுமைப் படுத்துவோம், ஒற்றுமைப் படுத்துவோம், இந்துக்களை ஒற்றுமைப் படுத்துவோம்!

காப்போம் காப்போம், இந்துவேதப் பண்பாட்டைக் காப்போம்!

பரப்புவோம், பரப்புவோம், இந்துவேத நாகரீகத்தைப் பரப்புவோம்!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**அன்பு - சித்தர்**
**தலைவர், குருதேவர், ஞானத் தந்தை,**
**அந்தணர் அண்ணல்,**
**ஞாஞச்சாரியார்**
**12/9/94**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்திலும், சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்திலும் கிடைத்தது. இறுதியில் குருதேவரின் கையொப்பம் இருந்தது.//**

**பத்தர்களின் சங்கங்கள் சிந்திக்க முன்வர வேண்டும்!**
**அதுதான் பத்தர்களின் மெய்யான தொண்டு!**

நமது இந்துக்கள், இந்துமதத் திருநாள்கள், திருவிழாக்கள், சடங்குகள், சாத்திர சம்பிறதாயங்கள், கோயில் வழிபாடுகள், பாரம்பரியக் குலதெய்வ குடும்ப ஆண்டவர் பூசைகள்..... முதலியவைகளை யெல்லாம் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றுர்கள். நமது இந்துக் கோயில்கள் அனைத்திலும் கூட்டம் நிரம்பி வழிகின்றது. நமது மதத் தலைவர்கள், ஆச்சாரியார்கள், மடாதிபதிகள், சாமியார்கள்.... முதலியோர் எல்லாம் நல்ல வளத்தோடும் செல்வாக்கோடும் புகழோடும் ஞான உலா வருகின்றுர்கள். இப்படி யெல்லாம் இந்துமதம் சீரும் சிறப்புமாக இருக்கின்றது.

இந்த நிலையில் இந்துக்களிலேயே ஏன் கடவுள் மறுப்பாளர்கள், வெறுப்பாளர்கள், மத எதிர்ப்பாளர்கள், நாத்திகர்கள், மத விரோதிகள், மதத் துரோகிகள், மதப் போலிகள், மதக்காலிகள், மதக் கருங்காலிகள் அதிகமாகிக் கொண்டே போகின்றுர்கள்? .... இவற்றிற்கெல்லாம் மேலாக; அன்னிய நாட்டார்கள் தங்களுடைய வேதங்களின் புகழ் பாடியும், வேத வசனங்களை முழக்கியும், வேத மதப் பூசைமுறைகளையும், சடங்குகளையும், வரலாறுகளையும் விளக்கி யுரைத்து, தங்களுடைய மதத்துக்காக அன்னிய நாடுகளிலிருந்து வந்து குவியும் ஏராளமான பணத்தின் மூலம் ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களை விலை கொடுத்து வாங்கியும்.... இந்து மதத்தைச் சீரழித்துக் குறைத்து நலிந்து மெலியச் செய்கின்றுர்கள். இது ஏன்? ஏன்?! ஏன்?!! இது எப்படி நிகழுகிறது?! எப்படி நிகழுகிறது??!! எப்படி நிகழ்கிறது???!!!.... என்பதை இது போன்ற பத்தர்களின் சங்கங்கள், சபைகள், குழுக்கள், கழகங்கள் சிந்திக்க முன்வர வேண்டும்! ஆராய்ச்சி செய்ய முன்வர வேண்டும்!! அதுதான் பத்தர்களின் மெய்யான தொண்டு! அதுதான் பத்தர்கள் உடனடியாகச் செய்ய வேண்டிய கடமை.

***- ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அருள்வாக்கு***

**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்.**

**இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**



**“இந்த உலகின் மூல, முதல் வேதமே இந்துவேதம்”**

**“மனிதப் பிறவியே புனிதப் பிறவி என்று கூறும் வேதமே இந்துவேதம்”**



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Ilamai maaraa Ilakkiya Iyakkam (இளமை மாறு இலக்கிய இயக்கம்), Guduvanchery. Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. Printed at Sri Vignesh Printers, Madurai.

**www.gurudevar.org Email: indhuism@gmail.com**